**செய்தி வெளியீடு எண்: 033** **நாள் : 14.01.2016**

**பத்திரிகைச் செய்தி :**

# சிவலிங்கத்தில் தமிழ்–பிராமி கல்வெட்டு தொல்லியல் துறை கண்டுபிடிப்பு

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெட்ரம்பாக்கம் கிராமத்தில் ஊர் பொது மக்களின் கட்டுப்பாட்டிலுள்ள சிவன்கோயிலின் புனரமைப்பு செய்யும்போது சிவலிங்கத்தின் கீழ் பகுதியில் (பிரம்ம பாகத்தில்) கல்வெட்டு இருப்பதாக ஊர் பொதுமக்கள் தொல்லியல் துறைக்கு தகவல் தெரிவித்தனர். இத்தகவலின் பேரில் திரு. கோ. அர்ச்சுணன், மேனாள் தொல்லியல் துணை கண்காணிப்பாளர் மற்றும் இத்துறை கல்வெட்டாய்வாளர் திரு.பொ.கோ. லோகநாதன் அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். லிங்கத்தின் பிரம்மபாகத்தில் தமிழ்–பிராமி கல்வெட்டு ஒன்று காணப்பட்டது, அதனை படியெடுத்து படித்து பொருள் வழங்கினார். இந்த சிவலிங்கம் 3.4 அடி உயரமும், சுற்றளவு 2.5 அடி அளவில் காணப்படுகிறது.

**கல்வெட்டின் அமைப்பு**

இந்த தமிழ்–பிராமி கல்வெட்டில் இதழ் விரிந்த தாமரை மற்றும் அதன் மொட்டும், இருபக்கமும் வட்ட வடிவிலான பதாகைகள் இரண்டும், மேலும் ஒரு குறியீடும் உள்ளது. இதன் கீழ் பகுதியில் தமிழ்–பிராமி கல்வெட்டு ஐந்து எழுத்துகளுடன் காணப்படுகிறது. இக்கல்வெட்டின் காலம் **கி.பி. 2 – 3** ஆம் நூற்றாண்டாக இருக்கும் என கருதப்படுகிறது, இக்கல்வெட்டின் வாசகம் **“சேநருமான்”** என்று உள்ளது. இது ஒரு ஆட்பெயராக இருக்கலாம்.

**கல்வெட்டின் வாசகம்**

சே – ந – ரு – மா – ன்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**